
பக்கங்கள் 17 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 03 சனிக்கிழமை 17.01.2026 | அதிர்வு 171

## பூஸா சிறையில் அமைதியின்மை

### 6 கைதிகள் இடமாற்றம்



பூஸா சிறைச்சாலையில் அமைதியின்மையை ஏற்படுத்திய கைதிகள் ஏனைய சிறைச் 03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# வெற்று வார்த்தை தீர்வைத் தராது!

## நீதி, நியாயம் வேண்டும் என்று அநுரவிடம் சுரேஷ் வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

"ஜனாதிபதி அவர்களே! வெற்று வார்த்தை ஜாலங்கள் தீர்வைத் தரா. நடைமுறையில் சட்டம் ஒழுங்கு, நீதி, நியாயம் என்பவை காப்பாற்றப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்."

- இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். 04



# முல்லைத்தீவில் வயல் காவலில் இருந்த இளைஞரின் உயிரைப் பறித்த யானை!



(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேறாங்கண்டல் பகுதியில் வயல் காவலில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் இன்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் தேறாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த பொன்முடி சுயந்தன் (வயது 19) என்பவராவார்.

வழமைபோல் விவசாய நிலத்தைப் பாதுகாக்கும் 03




# ‘பொங்கு தமிழ்’ பிரகடனத்தின் 25 ஆம் ஆண்டு நிறைவு நாள்!

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இன்று நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் “பொங்கு தமிழ்“ பிரகடனத்தின் 25 ஆம் ஆண்டு நிறைவு நாள் இன்று நினைவுகூரப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக வளாகத்துக்குள் உள்ள “பொங்கு தமிழ்“ நினைவுத் தூபி முன் ஒன்றுகூடி நினைவுகூர்ந்தனர்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பவை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று “பொங்கு தமிழ்“ பிரகடனம் அன்று வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட மூன்று இளைஞர்கள் மடக்கிப் பிடிப்பு!

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த மூன்று இளைஞர்கள் கம்பளை பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

டுபாயில் இருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் டுபாய் இஷார என்பவரின் போதைப்பொருளை இலங்கையில் விநியோகிக்கும் மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

20 முதல் 22 வயதுக்குட்பட்ட மூவரே இவ்வாறு சிக்கியுள்ளனர்.

கம்பளை, நாவலப்பிட்டி, உலப்பனை, தொழுவ, கெலிஓயா, பேராதனை மற்றும் வெலிகல்ல உள்ளிட்ட பகுதிகளுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று இவர்கள் போதைப்பொருளை விநியோகித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் கம்பளை தொழுவ பகுதியில் வைத்து இருவரும், மஹர பகுதியில் வைத்து மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கம்பளை அங்கம்ம, கவல்வல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இவர்கள், கொழும்பில் இருந்து போதைப்பொருளைப் பெற்றுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இது தொடர்பாக கம்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# எஸ்.ரி.எவ். சீருடை அணிந்து நடமாடிய இளைஞர் ஒருவர் யாழில் சிக்கினார்!

**(எஸ்.நிதர்ஷன்)**

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் சீருடையை ஒத்த ஆடையை அணிந்த இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டார்.

யாழ். நகரில் உள்ள நட்சத்திர விடுதி ஒன்றின் முன்பாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் அணியும் காற்சட்டடையை ஒத்த ஆடையை அணிந்திருந்தவரே கைது செய்யப்பட்டார்.



யாழ். பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கைதான சந்தேகநபர் விசாரணைகளுக்குப் பின்னர் யாழ். தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர் சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கில் வயல் காவலில் ஈடுபட்டிருந்த வேளையில், திடீரென காட்டு யானை தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பலவிதமான கஷ்டங்களும் இயற்கை அனர்த்தங்களும் சூழ்ந்த நிலையில் விவசாயத்தை நம்பி வாழும் இந்தப் பகுதி மக்களிடையே, இந்தச் சம்பவம் பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

மேலும், காட்டு யானைகளின் அச்சுறுத்தலால் தொடர்ச்சியாக உயிரிழப்புகள் ஏற்பட்டு வருவதால், இதற்கான நிரந்தர தீர்வைப் பெற்றுத் தருமாறு பிரதேச மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## பூஸா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று மாலை சிறைச்சாலையின் 'டி' பிரிவின் கூரை மீது ஏறிய கைதிகள் குழுவொன்று, சிறை நிர்வாகத்துக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், இதன்போது சிறைச்சாலையின் சில உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டன.

தற்போது அந்த நிலைமை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

சிறைச்சாலை திணைக்களம் இது குறித்து விசாரணை செய்து வருகின்றது.

சம்பவத்துடன் தொடர்புடைய கைதிகளை இனி பூஸா அதியுயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தங்க வைக்க முடியாது எனவும், எனவே அவர்களை ஏனைய சிறைச்சாலைகளுக்கு இடமாற்றம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஏ.சி. கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 6 கைதிகள் ஏனைய மூன்று சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# நாம்,எருமை மாடா?

எங்கிருந்தோ வந்தவர்கள்
எமையும் சேர்த்து
இந்தா நீ வைத்துக்கொள்
எதுவென் றாலும்
உந்தனுக்குப் போல் அவர்க்கும்
சேரு மாறு
ஒருசேரச் சேர்ந்து செயல்
செய்க என்றார்.

வந்தவர்கள் போய் ஊரைச்
சேரு முன்னே
வாழ்வுரிமை பறித்தீர்கள்,
குடியேற் றத்தால்
எங்கள் நிலம்
உங்கள் நிலமாக்கினீர்கள்,
எம்மீது உம்மொழியை
ஏற்றி னீர்கள்,
எம்மவரைப் பல்கலையில்
எற்றினீர்கள்,
உங்க ளவர்க்கே
உயர்ந்த பதவியெல்லாம்,
உங்கள் மதமே
உயர்வு...ஒற்றை ஆட்சி...
என்றிவையும் இன்னின்னும்
வந்த போதும்
எதிர்த் தெதிர்த்தே அவைமுர்க்கம்
தணித்தோம்....நீங்கள்,

கொன்றொழித்தீர் எம்மவரைக்,
கொள்ளையிட்டீர்,
குற்றுயிராய் எம்முர்க்குத்
துரத்தி விட்டீர்
அல்லல் தனைத் தாங்காது
எமது வீரர்
அறமுறையிற் தற்காப்புச்
செய்த போது
வெல்லவழி இல்லாமல்
ஓல மிட்டு
வேற்றவர்கள் வந்ததுமே...
நீதி செய்வோம்
கை தருக, எனப் பற்றி
முறைமை நீங்கிக்
கரவாகவே.... செய்த
போரை வென்று,
பல்வகையாய்ப் பொய் பொய்யாய்ச்
சொல்லிச் சொல்லி
பதினாறு வருடங்கள்
தாண்டினாலும்,
சொன்னவைகள் ஒன்றையுமே
செய்திடாத
சோணங்கியர் வரியில்
நீரும் நின்று
"முழுநாடும் ஒன்றாக"
என்கின் றீர்கள்,
முற்றுமிதை நம்பிட நாம்
எருமை மாடா?



**அண்ணாதாசன்.**

## வெற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்கவின் பிரஜாசக்தி நியமனத்தைக் கண்டித்தும், பொங்கல் பண்டிகைக்காக ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து தெரிவித்த கருத்து தொடர்பிலும் விளக்கமளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

"இலங்கையின் கிராமப்புறங்கள் அனைத்தும் கிராம சேவக பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. இந்தக் கிராம சேவகர் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் கிராம சேவகர் ஒருவர் பொறுப்பாக இருக்கின்றார். அந்தக் கிராமத்தில் இருக்கக்கூடிய மக்கள் பிரச்சினைகள், அந்தக் கிராமம் பற்றிய புள்ளிவிவரங் கள், அபிவிருத்திகள் அனைத்தையும் தனது விரல் நுனியில் வைத்திருப்பவர்க ளாகக் கிராமசேவகர்கள் இருக்கின்றனர். இதற்கு மேலாக மக்கள் குழுக்கள் வரக் கூடிய விடயங்களைக் கையாள்வதற் கான பொறுப்பும் கடமையும் இருப்ப துடன் பொலிஸாருக்கு முன்னராக இவர்களே இந்த விடயங்களைக் கையாள்கின்றார்கள்.

இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர் என ஒருவர் நியமிக்கப் பட்டிருக்கின்றார். அவரும் அந்தப் பிர தேசத்தின் அபிவிருத்தி தொடர்பான பணிகளைக் கண்காணிக்கின்றார். மூன் றாவதாக கிராமங்களில் இருக்கக்கூடிய வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளை முன் னெடுப்பதற்காக சமுர்த்தி உத்தியோகத் தர் என மற்றொருவர் நியமிக்கப்பட்டி ருக்கிறார். இவர்களுக்கூடாக மக்களுக் கான கடன் வசதிகள், மற்றும் மக்கள் நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படு கின்றன. இவர்கள் அனைவரும் அரச உத்தியோகத்தர்களாக தமது மேலதி காரிகளுக்குப்பொறுப்புக்கூறவேண்டியவர் களாக இருக்கின்றனர்.

இப்பொழுது இவை அனைத்திற்கும் மேலாக, நான்காவது உத்தியோகத்தராக வந்திருக்கக்கூடிய ஜே.வி.பி. – என். பி.பி. அரசாங்கமானது பிரஜாசக்தி என்ற பெயரில் மேற்சொன்ன கடமைக ளைக் கண்காணிப்பதற்காக மேலதிக மாக ஒருவரை நியமனம் செய்கின்றது. இவர்களது கல்வித்தகைமை, இவர்க ளுக்கான நேர்முகப் பரீட்சைகள் என்று எதுவுமே கிடையாது. இவர்களுக்கான அடிப்படைத் தகுதி ஜே.வி.பியின் கட்சி உறுப்பினராக இருப்பது மட்டுமே. இவர்களுக்கு மேலதிகாரிகளாக யாரும் கிடையாது. யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய கடமைப்பாடும் கிடையாது. இவர் நேரடியாக மாவட்ட, பிரதேச அபி விருத்திக் குழுக்களின் ஒருங்கிணைப் பாளருடன் தொடர்பில் இருப்பார். ஒருங்கிணைப்பாளர் என்பவர் நாடா ளுமன்ற உறுப்பினராகவோ, அமைச்சர் களாகவோ இருக்கின்றனர்.

ஆகவே மக்களால் தெரிவுசெய்யப் பட்ட உள்ளூராட்சி உறுப்பினர்களையும் மீறி, உள்ளூராட்சி சபைகளின் தீர்மா னங்களையும் மீறி, நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஓரங்கட்டி கிராமப் புறங்களில் அரசாங்கம் தனது இருப்பை உத்தரவாதப்படுத்தும் முகமாக, சட்டவிரோதமான முறையில் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இது குறித்து கேள்வி எழுப்பப்படுமாக இருந்தால், இந்த பிரஜாசக்தி உத்தியோ கத்தர் என்பவர் சம்பளமற்ற தன்னார்வ சேவை செய்பவர் என்று கூறப்படுகின் றது. அவ்வாறாயின், ஏற்கனவே மக்க ளின் வரிப்பணத்தில் சம்பளம் கொடுத்து கிராம மட்டத்தில் மூன்று உத்தியோகத் தர்கள் பணியாற்றுகின்ற நிலையில் அவர்களை ஓரங்கட்டி இப்புதிய உத்தி யோகத்தருக்கான தேவை ஏன்? என்ற கேள்விக்கு அரசாங்கத் தரப்பிலிருந்து பதில் இல்லை.

இப்பொழுது இருக்கக்கூடிய என். பி.பி. – ஜே.வி.பி. அரசாங்கமானது தன்னை ஒரு நேர்மையான, நீதியான, கட்சிசார்பற்ற, நாட்டைமுன்னேற்றுகின்ற ஒரு புதிய அரசாங்கமாக தன்னைப் பிரகடனப்படுத்தி வருகின்றது. முன்னர் இருந்த அரசாங்கங்கள் அனைத்தும் மேலிருந்து கீழ்மட்டம்வரை தமது கட்சி சார்ந்தவர்களையே பல்வேறு துறைக ளுக்கும் நியமித்தார்கள் என்றும் இன் றைய அரசாங்கம் அவ்வாறின்றி திறமைக்கு முன்னுரிமை கொடுப்போம் என்றும் அத்தகைய தவறுகள் நிகழாமல் பார்த்துக்கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டது. ஆனால், இன்று அரசாங் கம் கொண்டுவந்திருக்கக்கூடிய பிரஜா சக்தி நியமனம் என்பது முழுக்க முழுக்க கட்சி சார்பானதாகவே இருக்கின்றது.

இதனைப் போலவே, மக்களின் காணிகளை விடுவிப்போம் என்று கூறியவர்கள், மக்களின் காணிகளை படையினர் மூலம் அடாத்தாகக் கையகப் படுத்தி, அதில் புத்தர் கோயிலைக் கட்டி, காணிகளை மீள வழங்க முடியாது என்று கூறுவதும்கூட, ஒரு சட்ட விரோத செயற்பாடாகும். அந்த சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக நீதியானதும் நியாயமானதுமான எத்தகைய தீர்வை யும் இவர்களாலும் கொடுக்க முடியாது என்பதை இந்த அரசாங்கமும் தெளிவு படுத்தியுள்ளது.

அதுமாத்திரமல்லாமல், பொங்கல் விழாவுக்கு யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி, தையிட்டியில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோத விகாரை நிர்மாணம் தொடர் பாகவும், அந்தக் காணி அபகரிப்புக்கு எதிராகவும், பௌர்ணமி தோறும் நடை பெறும் போராட்டத்தைக் கொச்சைப்ப டுத்தி நக்கல் அடித்ததோடு மட்டுமன்றி, தமிழ் இனவாத சக்திகளே அப்போராட் டத்தை முன்னெடுப்பதாகவும் கூறியுள் ளார்.

அவரைப் பொறுத்தவரையில் சட்ட விரோதமாகக் காணிகளை அபகரிப்பது இனவாதமல்ல, அந்த சட்டவிரோத காணிகளில் புத்த விகாரை கட்டுவதும் இனவாதமல்ல. ஆனால் காணிகளைப் பறிகொடுத்தவர்கள் தமது காணிகளைத் திரும்பக் கோருவது இனவாதமாகும். மொத்தத்தில் நிர்வாகத்தில் நியமனங் களும் சட்டவிரோதமாகச் செயற்படுத் தப்படுகின்றன. காணி, பூமி விடுவிப்புக ளும் சட்டவிரோதமாகவே செயற்படுத் தப்படுகின்றன. இவை அனைத்தையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி வன்மையாகக் கண்டிப்பதுடன், சட்ட விரோத செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஜன நாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கோருகின்றது. ஜனாதிபதி அவர்களே! வெற்று வார்த்தை ஜாலங்கள் தீர்வைத் தராது. நடைமுறையில் சட்டம் ஒழுங்கு, நீதி, நியாயம் என்பவை காப்பாற்றப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர் பார்க்கின்றனர்." – என்றுள்ளது.



# யாழில் எம்.ஜி.ஆர். பிறந்த தின நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் 109ஆவது பிறந்த தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது.

யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் குடும்பத்தின் ஏற்பாட்டில் கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி. இராமச்சந்திரனின் சிலைக்கு முன்பாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

எம்.ஜி.இராமச்சந்திரனின் சிலைக்கு கல்வியங்காடு வர்த்தக சங்கத் தலைவர் அ.கேதீஸ் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் குடும்பத்தினரால் எம்.ஜி. இராமச்சந்திரன் மற்றும் யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்துக்கு நெய் விளக்குகள் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

எம்.ஜி. இராமச்சந்திரனின் நண்பனும் தீவிர இரசிகனுமாக விளங்கிய யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கம் கல்வியங்காடு பகுதியில் தனது சொந்த நிதியில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு முன்பாக ஆண்டுதோறும் எம்.ஜி.ஆர். நினைவேந்தலைச் செய்து வந்த நிலையில் அவர் சில ஆண்டுகளுக்கு முன்னர் இயற்கை எய்தினார்.

இந்தநிலையில் அவரின் மறைவுக்குப் பின்னர் அவரின் குடும்பத்தினர் இந்த நிலைவேந்தல் நிகழ்வுகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.












# கட்டைக்காட்டில் 150 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

**(மரியசீலன் திலைக்ஸ்)**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கிழக்கு பகுதியில் நேற்று இரவு கேரளா கஞ்சாவுடன் கட்டைக்காட்டில் உள்ள விளையாட்டுக் கழகம் ஒன்றின் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று இரவு கட்டைக்காடு கிழக்கு பகுதியில் மருதங்கேணி பொலிஸாரால் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது

இதன் போது சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த இந்த நபரை பொலிஸார் சோதனை செய்தபோது உடைமையில் 150 கிலோ கேரளக் கஞ்சாவை வைத்திருந்தமைக்காக அவர் கைது செய்யப்பட்டார்.

அவர் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் மேலதிக நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி நீதிமன்றத்தில் அவர் முற்படுத்தப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர் கடந்த வருடம் 70 கிலோ கேரளக் கஞ்சாவை கடல் வழியாக கடத்தி வந்த வேளை வெற்றிலைக்கேணி கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு விடுதலையானவை என்று கூறப்படுகின்றது.

கடந்த வருடம் 70 கிலோ கஞ்சாவுடன் இந்த நபர் கைது செய்யப்பட்ட புகைப்படம் இந்தச் செய்தியில் பிரசுரமாகியுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# முதலைக் கண்ணீர்

"அன்று யுத்தம் காரணமாக தமது பிள்ளைகள் பற்றி பயந்து வாழ்ந்த வடக்கின் பெற்றோர்கள், இன்று போதைப்பொருள் காரணமாக தமது பிள்ளைகள் குறித்து அச்சத்துடன் வாழ வேண்டியுள்ளது."

-இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் வந்து தெரிவித்துச் சென்றிருக்கின்றார்.

அவர் கூறியமை முற்றிலும் உண்மை என்றாலும், அதையும் தாண்டி இரண்டு விடயங்களை அவர் குறிப்பிடாமல் விட்டுச் சென்று இருக்கின்றார் என்பதுதான் நிஜம். அவற்றை இங்கு சுட்டிக் காட்டுவது தவிர்க்க முடியாததாகின்றது.

ஒன்று - யுத்தத்தின் பீதியும் போதைப் பொருள் பாவனையின் மோச விளைவுகளின் அச்சமும் வடக்குக்கு மாத்திரமானது ஒன்று அல்ல. யுத்தத்தின் பீதி யுத்த காலத்தில் தென்னிலங்கையிலும் இருந்தது. போதைப் பொருள் பாவனையின் பீதி தென்னிலங்கையில் இப்போதும் இருக்கின்றது. ஆகவே இந்தப் பிரச்சினை வடக்குப் பெற்றோருக்கு மாத்திரமானது மட்டுமல்ல, தெற்குக்கும் உரியதுதான்.

அடுத்ததுதான் முக்கிய விடயம். வடக்குப் பெற்றோரைப் பொறுத்தவரை இந்த இரண்டும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசோச்சும் தென்னிலங்கை ஆட்சி பீடத்தினாலும் பேரினவாதத்தினாலும் தமிழர்கள் மீது சுமத்தப்பட்டவை என்பதை அவர்கள் மறந்து விடவில்லை என்பதுதான் அது.

வடக்குத் தமிழர்கள் யுத்தத்தை விரும்பி ஏற்றவர்கள் அல்லர். ஆயுதங்களை ஆசைப்பட்டு கையில் தூக்கியவர்கள் அல்லர். தென்னிலங்கை சிங்கள ஆட்சி பீடத்தின் வன்முறை ரீதியான அடக்குமுறைதான் தங்கள் மக்களையும், தங்கள் தேசத்தையும், தங்கள் இனத்தையும் காப்பாற்றுவதற்காக தமிழர்களை ஆயுதம் ஏந்தக் கட்டாயப்படுத்தியது.

ஆக, யுத்த பீதி ஏற்படுவதற்கான மூல காரணமே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று பிரதிநிதித்துவப்படுத்தும் தென்னிலங்கை ஆட்சிப் பீடமும் அதிகாரத் தரப்பும்தான்.

அதேபோல தமிழர்கள் தங்களுடைய தேசத்தை உத்தியோகப் பற்றற்ற ஒரு நாடாக சுமார் இரண்டு தசாப்தங்களாகப் பரிபாலித்து வந்த காலத்தில் தமிழர் தேசத்தில் போதைப் பொருள் என்ற பேச்சே மூச்சுக்கும் இருக்கவில்லை. யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர்தான் தமிழர் தேசத்துக்குள் போதைப் பொருள் ஊடுருவியது.

தமிழ் இளைஞர்களின் உரிமைக்கான- விடுதலைக்கான- எழுச்சிக்கான- மனச் சிந்தனையை சீரழிப்பதற்காக யுத்தம் முடிவுற்ற காலத்தில் போதைப்பொருள் தமிழர் தேசம் மீது தெற்கினால் திட்டமிட்டு வலிந்து விதைக்கப்பட்டது என்ற ஒரு கருத்து நிலை யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்து மக்களுக்கு இருக்கின்றது என்பதை மறந்து விட முடியாது.

ஆக, யுத்தம் குறித்தும், பின்னர் இப்போது போதைப் பொருள் பாவனை குறித்தும் தமிழ் மக்கள் இவ்வளவு தூரம் அச்சப்பட வேண்டிய நிலை இருக்கின்றது என்றால், அதற்குக் காரணகாரியமானவர்களே வடக்கில் வந்து நின்று அது பற்றி தமிழ் மக்களிடம் பச்சாதாபம் தெரிவிப்பது விந்தையிலும் விந்தை. அது முதலைக் கண்ணீர் வடிக்கும் வேலைக்கு ஒப்பானது.



# கேணல் கிட்டுவின் நினைவேந்தலும் ஆவணக் காட்சியகம் திறந்துவைப்பும்

வங்கக்கடலில் காவியமான கேணல் கிட்டு உட்பட 10 வீரர்களின் 33 ஆவது நினைவேந்தல் நிகழ்வு போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள கிட்டுப் பூங் காவில் நடைபெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் சிறப் பம்சமாக நல்லூர் தியாக தீபம் திலீபன் ஆவணக் காப்பத்தால் உருவாக்கப்பட்ட 'கிட்டு ஒரு தனி மனித வரலாறு' என்னும் தொனிப் பொருளுடன் கேணல் கிட்டு வின் வாழ்வியல் தொடர்பான ஆவணக் காட்சியகமும் திறந்து வைக்கப்பட் டது.

அகவணக்கம் செலுத்தப்பட்டு, மாவீரர்களின் திருவுருவப் படத்துக் குச் சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலை அணி விக்கப்பட்டு மலர்தூவி அஞ்சலி செலுத் தப்பட்டது.

இந் நினைவேந்தல் நிகழ்வில் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், யாழ். மாநகர சபை முதல்வர் வி.மதிவ தனி, மதத் தலைவர்கள், முன்னாள் போராளிகள் அமைப்பின் உறுப்பி னர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், பிரதி தவிசாளர்கள், யாழ். மாநகரசை சபை உறுப்பினர்கள், தமிழ்த் தேசியப் பற்றாளர்கள், பொது மக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சுடரேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.















# தனித் தீவாக மாறியுள்ள வலைஞர்மடம் வீதிகள் சீரின்மையே இதற்குக் காரணம்

## நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்டார் ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வலைஞர்மடம் கிராமத்துக்குச் செல்வதற்கான பிரதான வீதிகள் மற்றும் கிராமத்திலுள்ள உள்ளக வீதிகள் என்பன சீரின்மையால் குறித்த வலைஞர்மடம் கிராமம் தனித்தீவாக மாறியுள்ளது என்று அந்தக் கிராம மக்களால் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கிராம மக்களின் முறையீட்டைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேற்று வலைஞர்மடம் கிராமததுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

அந்தவகையில் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஏ-35 பிரதான வீதியிலிருந்து வலைஞர் மடத்துக்கு வருகை தரும் மாதா சந்தி வீதி மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதை இதன்போது கிராமமக்கள் நாடாளுமன்ற உறுப்பினரது கவனத்துக்குக் கொண்டுவந்தனர். ஏதேனும் அனர்த்தம் ஏற்பட்டால் மக்கள் கிராமத்தைவிட்டு வெளியேறும் பிரதான மார்க்கமாக குறித்த வீதியே காணப்படுவதாகவும் இதன்போது மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரியப்படுத்தப்பட்டது.

அந்தவகையில் குறித்த வலைஞர் மடம் மாதாசந்தி வீதி சீரின்றிக் காணப்பட்டதால் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின்போதும் படகுகளின் மூலமே மக்கள் கிராமத்தை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது என்றும் இவ் வீதி சீரின்றிக்காணப்படுவதால் இந்த வலைஞர்மடம் கிராமம் தனித்து விடப்பட்ட தீவாக மாறியுள்ளது எனவும் கிராம மக்களால் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

எனவே தமது நிலையைக் கருத்தில் கொண்டு குறித்த வீதியை சீரமைப்பதற்கு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அத்தோடு பொக்கணை வலைஞர் மடம் இணைப்புவீதி, வலைஞர்மடம் சவக்காலை வீதி உள்ளிட்ட உள்ளக வீதிகளின் சீரமைப்புத் தொடர்பிலும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் கிராம மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன்போது வலைஞர்மடத்தில் சுற்றுலா கடற்கரை ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பிலும் இதன் போது கிராம மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிலையில் வலைஞர்மடம் கிராம மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், எழுத்துமூலமாக தம்மிடம் கோரிக்மைகளைக் கையளிக்குமாறு தெரிவித்தார்.

மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை உரிய இடங்களுக்கு கொண்டு சென்று அக்கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

குறித்த களவிஜயத்தில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஜோசெப் மாசிலாமணியும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட ஆலயங்களை சுத்தம் செய்ய நிதி!





(வி.ரி.சகாதேவராஜா)

2025 டித்வா சூறாவளி மூலம் ஏற்பட்ட பெரு வெள்ள நிலைமை காரணமாக பாதிப்புற்ற அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆலயங்களுக்கு அவற்றை துப்பரவு செய்வதற்காக தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

குறிப்பாக ஆலயடிவேம்பு பிரதேசத்தில் 05 ஆலயங்களுக்கும், காரைதீவு பிரதேசத்தில் 05 ஆலயங்களுக்கும், நாவிதன்வெளி பிரதேசத்தில் ஒரு ஆலயத்துக்கும் அந்தந்த பிரதேச செயலகங்களில் வைத்து பிரதேச செயலர்களான ஜி.அருணன், பி.திரவியராசா, திருமதி ரங்கநாயகி சசீந்திரன் ஆகியோரால் உரிய ஆலய அறங்காவல் சபையினரிடம் காசோலைகள் வழங்கப்பட்டன.



இந்த நிகழ்வுகளில் அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மற்றும் பிரதேச செயலகங்களின் செயலாளர்கள், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# உழவு இயந்திர சுழற்சி சாதனம் நிறுத்தம் உடப்பில் கரைவலைத் தொழிலாளர் பாதிப்பு

(உடப்பு நிருபர் க.மகாதேவன்)

புத்தளம் உடப்பு செல்வபுரம் பகுதியில் கரைவலைத் தொழிலாளர்கள் கடந்த ஐந்து நாள்களாக கரைவலைத் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கவலை தெரிவித்துள்ளனர்.

இது பற்றி கரைவலை தொழிலாளர்கள் கூறும்போது,

கடந்த பல காலங்களில் கரைவலையை வலைக்கும் போது கூடுதலான மனித வலு காணப்பட்டது. அந்தக் கட்டத்தில் உழவு இயந்திரம் கரைவலை இழுப்பதற்கு பாவிக்கப்படவில்லை.

அண்மைக் காலத்தில் உழவு இயந்திரத்தில் சுழற்சி சாதனம் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது அதை நிறுத்தும்படி அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் உடப்பு பகுதியில் உள்ள 17 கரைவலைஉரிமையாளர்கள்பாதிப்படைந்துள்ளனர்.

ஒரு கரைவலையில் இருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் கஷ்டப்படுகிறோம். ஆகவே ஓரிரு கரைவலையில் மட்டும் ஆள்கள் காணப்பட்ட போது, அதனை வலைக்க முடியும். ஆள்கள் குறைவாக இருக்கும் கரைவலையை நடத்த முடியாத சூழ் நிலைகாணப்படுகிறது.

இதனால்அதிகாலையில்தொழிலுக்கு வந்தாலும் மீண்டும் வீட்டுக்கே திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது.– என்று தெரிவித்தனர்.

# புத்துயிர் பெறும் கற்பிட்டி வர்த்தக சங்கம்!



(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி பிரதேசத்தில் வர்த்தக சங்கத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்தும் முகமாக விஷேட கலந்துரையாடல் ஒன்று வெள்ளிக்கிழமை இரவு கற்பிட்டி பஸார் ஜும்ஆ பள்ளிவாசலில் வர்த்தக சங்கத்தின் தலைவர் எஸ். ஏ.எம்.றியால்தீன் தலைமையில் இடம்பெற்றது.

கற்பிட்டி வர்த்தக சங்கத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்தி சக்திமிக்க சங்கமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இது அமைந்தது.


இந்தக் கலந்துரையாடலில் முதற்கட்ட நடவடிக்கையாக கற்பிட்டி நகரில் உள்ள சகல வர்த்தகர்களையும் சங்கத்தில் இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகளை முன்னெடுப்பது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்த வேலைத்திட்டத்தை ஒரு மாத காலத்துக்குள் நிறைவு செய்து சகல அங்கத்தவர்களையும் ஒன்றிணைத்து கற்பிட்டி பிரதேசத்துக்கான வர்த்தக சம்மேளனம் ஒன்றை உருவாக்குவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# ஐங்கரன் விக்கினேஸ்வராவின் 6 நூல்கள் சிட்னியில் வெளியீடு!

ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள், எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆஸ்திரேலியா, சிட்னி மாநகரில் வெளியிடப்படவுள்ளது.

"தேசிய சுய நிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்", "இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள்", "ஆபிரிக்க தேசிய இனங்களும் சுயநிர்ணய விடுதலையும்", "முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள்", "தென்கிழக்காசிய விடுதலைப் போராட்டங்கள்", "இந்தியாவில் தேசிய இன எழுச்சியும் வீழ்ச்சியும்" ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வரா






வின் ஆறு நூல்கள் வெளியீடு எதிர்வரும் பெப்ரவரி 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

பெமுள்வே சமூக மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு மூத்த எழுத்தாளர் மாத்தளை சோமு வின் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நூல் வெளியீட்டு விழாவில் நூலாசிரியர் அறிமுக உரையை கவிஞர் குவேந்திரன் ஆற்றுவார். அத்துடன் நூல்களின் ஆய்வுரைகளை சிட்னி இலக்கிய ஆர்வலர்கள் வழங்குவர்.

இந்த நிகழ்வில் சிறப்புரையை சிட்னியின் புகழ்பெற்ற வானொலி ஒலிபரப்பாளர் திருநாவுக்கரசு சிறிதரன் நிகழ்த்துவார். சிட்னி மாநகரில் நிகழும் இந்த நூல் வெளியீட்டின் ஏற்புரையை நூலாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.

# உழவு இயந்திர விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்!

**(உடப்பு நிருபர் க.மகாதேவன்)**

பஸ்ஸர மடோல்சிம 7 கணுவில் உள்ள மஹதோவ பிரதேசத்தில் உழவு இயந்திரம் ஒன்று வீதியை விட்டு விலகி மரத்தில் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் உழவு இயந்திரத்தைச் செலுத்திச் சென்ற 43 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.










# வட்டுவாகல் பாலத்துக்கான வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன

(பா.சதீசன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஊடான முல்லைத்தீவு ஏ – 35 வட்டுவாகல் பாலம் ஊடான வீதி துரிதகதியில் சீரமைக்கப்பட்டு வருகின்றது.

நாடெங்கிலும் நிலவிய சீரற்ற கால நிலை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திலும் தொடர்ச்சியான முறையில் பெய்த மழை மற்றும் காற்றால் குளம், கடலின் நீர்மட்டமானது வழமையை விட உயர்வடைந்திருந்தது. இதனால் வட்டுவாகல் பாலத்தின் நீர்மட்டம் உயர்வடைந்த நிலையில் குறித்த பாலம் பகுதியளவில் சேதமடைந்தது. இதனால் குறித்த பாலத்தினுடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

பின்னர் தற்காலிக வீதி புனரமைப்பின் மூலம் போக்குவரத்து வழமைக்கு திரும்பியது. இந்த நிலையில் குறித்த பாலம் திருத்த வேலைகள் மிக துரித கதியில் இரவு பகலாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## கண்ணீரில் கரையும் இளமை:

# தற்கொலைகளுக்குப் பிந்தைய சமூக உறவுகளின் துயரம்...!

இலங்கை, அதன் வளமான கலாச்சாரம் மற்றும் அமைதியான நிலப்பரப்புகளுக்குப் பெயர் பெற்றது என்றாலும், பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத ஒரு ஆழமான சமூக சவாலை எதிர்கொண்டுள்ளது தற்கொலை.

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடி, சமூக அழுத்தங்கள் மற்றும் போரின் நீண்டகால உளவியல் வடுக்கள் காரணமாக, 2025 ஆம் ஆண்டின் புள்ளி விவரங்கள் குறிப்பாக இளம் வயதினரிடையே (15-29) தற்கொலை விகிதம் மீண்டும் கவலைக்கிடமான அளவில் உயர்வதைச் சுட்டிக்காட்டுகின்றன.

தற்கொலை என்பது அந்தத் தனிமனிதனோடு முடிந்துபோகும் ஒரு நிகழ்வு அல்ல் அது ஒரு பேரழிவு அலை போலப் பரவி, தற்கொலை செய்து கொண்டவரின் குடும்பம், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூக உறவுகள் மீதும் நிரந்தர உளவியல், சமூகவியல், மற்றும் நிதி சார்ந்த துயரச் சுமையை சுமத்துகிறது.

இந்தக் கட்டுரை, 2025 ஆம் ஆண்டின் சமீபத்திய புள்ளி விவரங்கள் மற்றும் கள ஆய்வுகளின் அடிப்படையில், இலங்கையில் இளையோர் தற்கொலையின் ஆழமான தாக்கத்தையும், இத் துயரத்தின் பிடியில் சிக்கிய குடும்பம், நண்பர்கள் மற்றும் சமூக உறவுகள் எதிர்நோக்கும் நீடித்த துன்பத்தையும், அதற்குத் தேவைப்படும் தேசிய அளவிலான தீர்வுகளையும் விரிவாக ஆராய்கிறது.

இலங்கை இளையோரின் தற்கொலைச் சுவடு - 2025 புள்ளி விவரங்களின் அபாயம் இலங்கையின் தற்கொலை விகிதம் பூச்சிக் கொல்லித் தடைக்குப் பிறகு குறைந்திருந்தாலும், சமீபத்திய பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமின்மையால், மனநலப் பாதிப்புகள் அதிகரித்துள்ளன.

தேசிய விகிதம் - 2022ஆம் ஆண்டு பொலிஸ் தரவுகளின்படி, இலங்கையின் ஒட்டுமொத்த தற்கொலை விகிதம் ஒரு லட்சத்துக்குச் சுமார் 15 ஆக உள்ளது. இது தெற்காசியாவின் மிக உயர்ந்த விகிதங்களில் ஒன்றாகும். நாளொன்றுக்கு சராசரியாக 8-10 மரணங்கள் தற்கொலையால் நிகழ்கின்றன.

இளம் பெண்கள் அபாயம் (17-25 வயது) - 17 முதல் 25 வயதுக்கு உட்பட்ட இளம் பெண்களிடையே தற்கொலை விகிதம் ஒப்பீட்டளவில் மற்ற வயதுப் பிரிவுகளை விட அதிகமாக உள்ளது. திருமண வன்முறை, வரதட்சணை தொடர்பான அழுத்தங்கள், பாலியல் துன்புறுத்தல் மற்றும் குடும்பப் பொருளாதாரச் சுமை ஆகியவை இவர்களிடையே பிரதான காரணிகளாக உள்ளன.

இளைஞர்களின் முக்கிய காரணங்கள் - 18-35 வயதுடைய இளைஞர்களிடையே வேலையின்மை, கடன் பிரச்சினைகள் (குறிப்பாக நுண்நிதிக் கடன்), உயர்கல்வியில் தோல்வி மற்றும் போதைப் பொருள் பாவனை ஆகியவை முக்கிய அபாயக் காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

மாணவர்களின் மனநல ஆய்வு (2024 GSHS) - 13-17 வயதுடைய பள்ளி மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வு, சுமார் 18% மாணவர்கள் ஆழ்ந்த மனச்சோர்வு அறிகுறிகளைக் கொண்டிருப்பதையும், அச்சமூட்டும் விதமாக 15% மாணவர்கள் தற்கொலை பற்றி தீவிரமாகச் சிந்தித்திருப்பதையும் காட்டுகிறது.

இந்த புள்ளி விவரங்கள், தற்கொலை என்பது தனிப்பட்ட மனநலப் பிரச்சினைகளிலிருந்து மட்டுமல்லாமல், இலங்கையின் ஆழமான சமூக-பொருளாதார அழுத்தங்கள், குறிப்பாகப் பொருளாதார நெருக்கடி காலத்தில் உருவானது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

### தற்கொலைக்குப் பிந்தைய குடும்பத்தின் துயரம் ஆழமான வடுக்கள்

ஒரு குடும்பத்தில் நிகழும் தற்கொலை, இழப்பை விடவும் மிக ஆழமான, சிக்கலான துயரத்தை விதைக்கிறது. இது ‘சிக்கலான துக்கம்’ (Complicated Grief) என மனநல அறிவியலில் அழைக்கப்படுகிறது.

சிக்கலான உளவியல் தாக்கம் - குற்ற உணர்வு மற்றும் பழிசுமத்துதல்: குடும்ப உறுப்பினர்கள், குறிப்பாகப் பெற்றோர் மற்றும் உடன்பிறப்புகள், “நான் ஏன் கவனிக்கவில்லை?”, “இதை நான் தடுத்திருக்கலாமே” என்ற தீவிர குற்ற உணர்வில் தவிக்கின்றனர். இந்த உணர்வு மற்ற வகை மரணங்களில் ஏற்படும் துயரத்தை விட மிகக் கடுமையானது. தற்கொலை செய்துகொண்டவரின் மரணத்துக்கு மற்றவர்களை அல்லது தற்கொலை செய்து கொண்டவரையே பழிசுமத்தும் போக்கு குடும்ப உறவுகளை மேலும் சிதைக்கிறது.

உளவியல் நோய்களின் அதிகரிப்பு - தற்கொலைக்குப் பிந்தைய துயரத்தை எதிர்கொண்ட குடும்ப உறுப்பினர்கள் மனச்சோர்வு, பதற்றம், தூக்கமின்மை மற்றும் அதிர்ச்சிக்குப் பிந்தைய மன அழுத்தக் கோளாறு (PTSD) ஆகியவற்றால் பாதிக்கப்படுவதற்கான அபாயம் மற்றவர்களை விட 50% அதிகமாக உள்ளது என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இரண்டாம் நிலை தற்கொலை அபாயம்- குடும்பத்தில் ஒரு தற்கொலை நடந்தால், எஞ்சியிருக்கும் உறுப்பினர்கள், குறிப்பாகச் சகோதர / சகோதரிகள், தற்கொலை எண்ணங்கள் மற்றும் முயற்சி செய்வதற்கான அபாயம் இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரிக்கிறது. இது உடனடி மற்றும் தீவிர மனநல ஆதரவின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

உறவுகளில் விரிசல்- துக்கத்தை கையாளும் விதம் ஒவ்வொருவருக்கும் வேறுபடுவதால், குடும்ப உறுப்பினர்களிடையே உணர்ச்சி ரீதியான இடைவெளிகள் ஏற்படுகின்றன. ஒருவர் அமைதியாகத் துக்கப்பட, மற்றவர் கோபத்தை வெளிப்படுத்துகிறார். இந்த வேறுபாடுகள் குடும்பப் பிணைப்புகளைத் தளர்த்தி, உறவுகளை முடக்கச் செய்கின்றன.

பொருளாதாரச் சுமை - வருமானம் மற்றும் எதிர்கால இழப்பு, இழக்கப்பட்ட நபர் குடும்பத்தின் வருமானம் ஈட்டுபவராகவோ அல்லது விரைவில் ஈட்டக்கூடியவராகவோ இருந்தால், குடும்பம் திடீர் நிதி நெருக்கடியை எதிர்கொள்கிறது. குறிப்பாகக் கடனில் தற்கொலைகள் நிகழும்போது, அக் கடன் குடும்பத்தின் மீது சுமத்தப்பட்டு, எஞ்சியவர்களை மேலும் நிதிச் சுமைக்குள் தள்ளுகிறது.

சிகிச்சைச் செலவு- துயரத்தால் பாதிக்கப்பட்ட பிற குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் உளவியல் ஆலோசனை, மனநல மருந்துகள் மற்றும் சிகிச்சைக்கான செலவுகள் குடும்பத்தின் நிதி ஆதாரங்களை மேலும் வற்றச் செய்கின்றன.

### நண்பர்கள், சமூக உறவுகளின் கண்ணுக்குத் தெரியாத சோகம்

தற்கொலை என்பது குடும்பத்தை மட்டுமல்ல, நெருங்கிய நண்பர்கள் வட்டத்தையும், சமூகத்தின் பிற உறவுகளையும் ஆழமாகப் பாதிக்கிறது.

நண்பர்களின் அதிர்ச்சி மற்றும் விரக்தி - உளவியல் அதிர்ச்சி- இலங்கையில், இளைஞர்கள் தமது நண்பர்கள் மத்தியில் தங்கள் பிரச்சினை

தொடர்ச்சி▼

# கண்ணீரில் கரையும் இளமை:

# தற்கொலைகளுக்குப் பிந்தைய சமூக உறவுகளின் துயரம்...!

தொடர்ச்சி▲

களைப் பகிர்ந்துகொள்வது அதிகம். ஒரு நண்பரின் தற்கொலை, மற்ற நண்பர்களை அதிர்ச்சியிலும் விரக்தியிலும் ஆழ்த்துகிறது. அவர்கள் பெரும்பாலும் குற்ற உணர்வை (நானும் ஒரு காரணமாக இருக்கலாம் அல்லது நான் ஏன் உதவவில்லை?) அனுபவிக்கின்றனர்.

நம்பிக்கையின்மை – இளம் வயதில் இத்தகைய இழப்பைச் சந்திப்பது, வாழ்க்கையின் மீதான அவர்களின் நம்பிக்கையைப் பாதிக்கலாம். "எதிர்காலம் நிச்சயமற்றது" அல்லது "இன்னொரு நண்பரும் இதைச் செய்யக்கூடும்" என்ற அச்சம் அவர்களின் மனதைப் பீடிக்கிறது.

சமூகத் தனிமைப்படுத்தல் – தற்கொலை செய்து கொண்டவரின் நண்பர்கள், மற்றவர்களால் கேள்விகள் கேட்கப்பட்டு அல்லது விலக்கி வைக்கப்படலாம். இது அவர்களின் சொந்த துயரத்தை மறைக்கவோ அல்லது தனிமையில் துக்கப்படவோ வழிவகுக்கிறது. நண்பர்களுக்கான ஆதரவுக் கட்டமைப்புகள் (Peer Support) இல்லாதது இலங்கையின் கிராமப்புறங்களில் ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது.

சமூக உறவுகளின் பாதிப்பு மற்றும் களங்கம் – சமூக களங்கம் (Stigma): இலங்கையின் சமூக பண்பாட்டு சூழலில் தற்கொலை மரணம் ஒரு தீராத களங்கமாகப் பார்க்கப்படுகிறது. இது குடும்பம் மற்றும் உறவினர்களுக்குச் சமூகத்தின் முன் கூச்சத்தையும் வெட்கத்தையும் ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக, அக்குடும்பம் சடங்குகள், பண்டிகைகள் மற்றும் சமூக நிகழ்வுகளிலிருந்து விலக்கி வைக்கப்படலாம்.

பழிவாங்கும் மற்றும் வதந்திகளின் சுழற்சி – தற்கொலைக்கான காரணம் குறித்து உறவினர்கள் மற்றும் சமூகத்தில் வதந்திகள் பரவுவது இயல்பானது. "அவர்கள் குடும்பத்தில்தான் கோளாறு", "காதல் தோல்விக்குக் காரணம் யார்?" போன்ற பேச்சுக்கள் எஞ்சியிருக்கும் குடும்ப உறுப்பினர்களின் துயரத்தை மேலும் தீவிரமாக்குகின்றன.

உறவினர்களுக்கிடையேயான உறவுகள் – தற்கொலைக்குப் பிந்தைய விசாரணைகள் மற்றும் பழிசுமத்தும் போக்குகள், நெருங்கிய உறவினர்களுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்துகின்றன. நீண்டகால உறவுகளும், பரம்பரை பிணைப்புகளும் சிதைவடைகின்றன.

தீர்வு நோக்கிய நகர்வு – தடுப்பரண்களை நிறுவுதல் – இலங்கையில் இளையோர் தற்கொலையின் சங்கிலித் தொடரை உடைப்பதற்கும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நண்பர்களின் துயரத்தைக் கையாள்வதற்கும் ஒரு விரிவான தேசிய மனநல உத்தி தேவைப்படுகிறது.

அ) மனநலச் சேவைகளை அணுகக்கூடிய தாக்குதல் –

பாடசாலை ஆலோசனை: பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மட்டங்களில் தகுதியான உளவியல் ஆலோசகர்கள் (Counsellors) கட்டாயமாக்கப்பட வேண்டும். 2024 GSHS ஆய்வு முடிவுகள் மனநலச் சேவைகளின் தேவை பள்ளி மட்டத்தில் அதிகமாக இருப்பதைக் காட்டுகிறது.

தற்கொலை தடுப்பு உதவி எண்கள்: 24/7 செயல்படக்கூடிய, இலவச மற்றும் நம்பிக்கைக்குரிய தற்கொலைத் தடுப்பு உதவி எண்களை (Helplines) நாடு முழுவதும் உள்ளூர் மொழிகளில் வலுப்படுத்த வேண்டும்.

ஆ) களங்கத்தை நீக்குதல் மற்றும் விழிப்புணர்வு:

ஊடகத்தின் பொறுப்பு: ஊடகங்கள் தற்கொலை தொடர்பான செய்திகளைப் பொறுப்புடன் கையாள வேண்டும். தற்கொலை முறைகளை விவரிப்பதைத் தவிர்க்கவும், மாறாக, உதவி பெறக்கூடிய ஆதாரங்களை (Helplines) முன்னிலைப்படுத்தவும் உலக சுகாதார அமைப்பின் (WHO) வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்.

சமூக மனநலக் கல்வி: கிராம மட்டங்களில் மனநலச் சேவைப் பணியாளர்கள் மூலம் (குநைடன றுழசமநசள) மனநலப் பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, சிகிச்சை பெறுவது இயல்பானது என்ற புரிதலை உருவாக்க வேண்டும்.

இதற்கொலைக்குப் பிந்தைய ஆதரவு (Postvention): துயரக் குழுக்கள்: தற்கொலை இழப்பைச் சந்தித்த குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களுக்காக பிரத்தியேகமான ஆதரவுக் குழுக்களை (Support Groups for Suicide Survivors) நிறுவ வேண்டும். இக்குழுக்கள் துயரத்தில் இருக்கும் நபர்கள் தங்கள் உணர்வுகளைப் பாதுகாப்பான இடத்தில் பகிர்ந்து கொள்ள உதவுகின்றன.

பள்ளி அளவிலான தலையீடு: ஒரு மாணவர் தற்கொலை செய்துகொண்டால், அப் பள்ளியில் எஞ்சிய மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உடனடியாக உளவியல் ஆதரவு மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.

ஈ)சமூக–பொருளாதார ஸ்திரத்தன்மை: இளைஞர்கள் மத்தியில் நம்பிக்கையின்மையைக் குறைப்பதற்கும், தற்கொலை அபாயத்தைக் குறைப்பதற்கும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும். கடனினால் ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைக்க நுண்நிதிக் கடன் தொடர்பான கொள்கைகளைச் சீர்திருத்த வேண்டும்.

உயிரை நேசிக்கும் சமூகம் இலங்கையில் இளம் வயதினரின் தற்கொலைகள் ஒரு தனிப்பட்ட இழப்பு மட்டுமல்ல அது ஒட்டுமொத்த சமூகத்தின் இதயத்தில் உருவாகும் ஒரு ஆழமான காயம். 2025 ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்கள் எச்சரிக்கை மணியை ஒலிக்கச் செய்கின்றன. குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் சமூக உறவுகள் அனுபவிக்கும் இந்த நீடித்த துயரத்தைப் போக்குவதற்கு, நாம் வெறும் வருத்தத்தை மட்டும் தெரிவிக்காமல், செயலில் இறங்க வேண்டும்.

நமது இளைஞர்களின் ஒவ்வொரு உயிருக்கும் மதிப்பு உண்டு. தற்கொலைகளைத் தவிர்ப்பது மற்றும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பது ஆகிய இரண்டையும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கடமையாகக் கருதி, உயிரை நேசிக்கும் ஒரு சமூகமாக இலங்கை தன்னை மாற்றியமைக்க வேண்டும்.



**மு.ஷாம்பவி**
உளவியல் துறை,
இரண்டாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.





# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டி; 1000 காளைகள், 600 வீரர்கள் பங்கேற்பு

பொங்கல் பண்டிகையொட்டி இந்த ஆண்டுக்கான உலக புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டி இன்று காலை 7 மணிக்கு கோலாகலமாக தொடங்கியது.

அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் வீரர்கள் உறுதிமொழி ஏற்ற பிறகு வாடிவாசலில் கோயில்காளைகள் அவிழ்க்கபட்டன. தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த ஜல்லிக்கட்டு காளைகளும் அவிழ்க்கப்பட்டன. ஒவ்வொரு சுற்றிலும் சீருடையணிந்த தலா 50 மாடுபிடி வீரர்கள் களமிறங்கி வருகின்றனர். போட்டியில் 1000 காளைகள், 600 இற்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

வாடிவாசலில் சீறிபாய்ந்த காளைகளை மாடுபிடி வீரர்கள் பிடித்து அடக்கி வருகின்றனர். சில காளைகள் மாடுபிடி வீரர்களை பக்கத்தில் நெருங்கவிடாமல் அலறவிட்டு களமாடி வருகின்றன. பிடிக்க முயன்ற வீரர்களை தூக்கிவீசிவிட்டும் சில காளைகள் பரிசுகளை பெற்றனர்.

இப்போட்டியில் நன்றாக களமாடும் முக்கிய காளைகள் களமிறக்க பட்டதால் பிடிக்க வீரர்கள் தயங்கினர். இதனால் மாடுகளை தயக்கமின்றி பிடிக்க விழா குழுவினர் அறிவுறுத்தினர். ஒரு கட்டத்தில் காளைகளை பிடிக்க முடியவில்லை என்றால் வெளியேறுங்கள் என வீரர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

போட்டியில் காயமடைந்தவர்களை உடனடி சிகிச்சை அளிக்கும் வகையில் முதலுதவி சிகிச்சை மையம் அமைக்கப்பட்டது. 10 இற்கும் மேற்பட்ட 108 நோயாளர்காவுவண்டிகள் தயார்நிலையில் வைக்கபட்டன.

காளைகளை அடக்கிய வீரர்களுக்கு தங்ககாசு, கட்டில், வெள்ளி பொருள்கள் உள்ளிட்ட பல்வேறு பரிசுகளும் வழங்கப்பட்டன. சிறந்த சிறந்த வீரருக்கு கார், காளைக்கு உளவியந்திரம் பரிசாக அறிவிக்கப்பட்டுள்ளன.



# ஜல்லிக்கட்டில் சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அரசு வேலை

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

பாரம்பரியமிக்க ஜல்லிக்கட்டு போட்டியில் அதிகக் காளைகளை அடக்கிய சிறந்த வீரர்களுக்கு அரசுப் பணி வழங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகளை இன்று காலையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்.

பின்னர், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் பேசுகையில்,

“மதுரை மண் வீரம் விளைந்த மண். வீர விளையாட்டான உலகப் புகழ் பெற்ற அலங்கநல்லூர் பார்க்கும்போது நமக்கு வீரம் வருகிறது.

இதில் காளைகளை அடக்கும் காளையர்களை பார்க்கும்போது தமிழ் மண்ணுக்கே பெருமையாக இருக்கிறது. திராவிட மாடல் ஆட்சியில் சங்கம் வளர்த்த மதுரையில் அறிவுக்காக கலைஞர் நூற்றாண்டு நூலகம், தமிழர்களின் அடையாளமான வீர விளையாட்டுக்கு கலைஞர் ஏறுதழுவுதல் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது மிகப்பெரிய சாதனையாகும்.

இப்போது ஜல்லிக்கட்டு போட்டியை ஒட்டி முதல்வராக சிலவற்றை அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்தால்தான் எனக்கு திருப்தியாக இருக்கும். அந்த வகையில் முக்கியமான 2 அறிவிப்புகளை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பாரம்பரிய ஜல்லிக்கட்டு விளையாட்டுப் போட்டிகளில் அதிக காளைகளை அடக்கி சிறந்து விளங்கும் வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்டையில கால்நடை பராமரிப்புத் துறையில் பணி வழங்கப்படும்.

மேலும், உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு காளைகளுக்கான 2 கோடி இந்திய ரூபா மதிப்பில் சிறந்த பயிற்சி மற்றும் உயர்தர சிகிச்சை மையம் அமைக்கப் படும். என்பதை அறிவிக்கிறேன். இதில் உங்களுக்கு மகிழ்ச்சிதானே, அந்த மகிழ்ச்சியான அறிவிப்புகளை அறிவித்த மகிழ்ச்சியோடு செல்கிறேன்.” என்றார்.



# இஸ்ரேலில் உள்ள வெளிநாட்டவரை விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தல்

இஸ்ரேலில் உள்ள வெளிநாட்டவரை விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஈரானில் ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அங்கு 3,000 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மக்கள் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், அமெரிக்க படைகள் மற்றும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்படும் என ஈரான் கூறியுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்ட தகவலில்,



“இஸ்ரேலில் உள்ள இந்தியர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். தேவையற்ற பயணத்தை தவிர்க்க வேண்டும். அவசர உதவி தேவைப்பட்டால் இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகத்தை தொடர்பு கொள்ளலாம்.” என தெரிவித்துள்ளது. இதேபோல் இஸ்ரேலில் உள்ள அமெரிக்கா, இங்கிலாந்து தூதரகங்களும் தங்கள் நாட்டவரை எச்சரித்துள்ளன.







# மெக்சிக்கோ, மத்திய அமெரிக்க வான்பரப்பில் விமானங்களுக்கு அமெரிக்கா கடும் எச்சரிக்கை

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மெக்சிக்கோ மற்றும் மத்திய அமெரிக்க வான்பரப்பில் விமானங்களை இயக்கும்போது எச்சரிக்கையுடன் இருக்குமாறு அமெரிக்க விமானப் போக்குவரத்து அதிகாரிகள் விமான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

தொடர்பு சாதனங்கள் மற்றும் பூகோள வழிசெலுத்தல் செயற்கைக்கோள் அமைப்பில் இடையூறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால், இது ஒரு ஆபத்தான சூழலா அமையக்கூடும் என மத்திய விமானப் போக்குவரத்து நிர்வாகம் தொடர்ச்சியான செய்திகள் மூலம் எச்சரித்துள்ளது.

மெக்சிக்கோ, மத்திய அமெரிக்கா, பனாமா, பொகோட்டா, கயாகுவில் மற்றும் மசாட்லான் பெருங்கடல் விமானப் பிராந்தியங்கள் மற்றும் கிழக்கு பசிபிக் பெருங்கடலுக்கு உட்பட்ட வான்பரப்புகளுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தல் அடுத்த 60 நாள்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

கடந்த ஜனவரி 3 ஆம் திகதி அமெரிக்க விசேட படையினர் மேற்கொண்ட தாக்குதல் மற்றும் வான்வழித் தாக்குதலில், போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்காக வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி சிலியா புளோரஸ் ஆகியோர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பதற்றமான சூழலுக்கு மத்தியில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.



# போராட்டங்களில் பலியானோர் எண்ணிக்கை 3,000 ஐ தாண்டியது

## ஈரானில் தொடரும் பதற்றம்

ஈரானில் நடைபெற்று வரும் அரசாங்க எதிர்ப்பு போராட்டங்கள் காரணமாக இதுவரை 3,090 பேர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடை, பணவீக்கம், சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட எரிபொருள் விலை மாற்றம் ஆகியவையே இந்த நெருக்கடிக்கு முக்கியக் காரணங்களாகும்.

இந்தநிலையில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் பாதுகாப்புப் படையிருக்கும் இடையே பல இடங்களில் மோதல் வெடித்ததை தொடர்ந்து வன்முறை யாக மாறியது.

வன்முறைகளில் பலியானோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

போராட்டத்தைக் கட்டுப்படுத்த இணைய சேவையை அரசாங்கம் துண்டித்துள்ளது.

இயல்பு நிலை திரும்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.





கனடா முரசு
சனிக்கிழமை 17/01/2026

## சவர்க்காரம் பயன்பாடு குறித்து கனடாவில் எச்சரிக்கை விடுப்பு

ஒன்டாரியோ மாகாணத்தைச் சேர்ந்த ஒரு நிறுவனத்தின் சவர்க்காரங்களுக்கு கனடா முழுவதும் மீளப்பெறும் அறிவிப்பை ஹெல்த் கனடா வெளியிட்டுள்ளது.

மெதில் யூஜெனோல் 02▶



# சீனா - கனடா இடையிலான வர்த்தக உறவில் திருப்பங்கள்

## வரி சலுகைகள் அறிவிப்பு

சீனா - கனடா வர்த்தக உறவில் புதிய திருப்பமாக வரி சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பீஜிங்கில், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் கனடா பிரதமர் மார்க் கார்னி இடையே நடைபெற்ற முக்கிய சந்திப்பில், இரு நாடுகளுக்கிடையிலான உறவை மீண்டும் அமைக்கும் வகையில் வரி சலுகைகளை அறிவித்துள்ளனர்.

சீனா, கனடாவின் கனோலா எண்ணெய் மீது விதிக்கப்பட்ட 85 சதவீத வரியை 15 சதவீதமாகக் குறைக்க ஒப்புக்கொண்டுள்ளது. 02▶

# கனடாவிடமிருந்து விடுதலை வேண்டும்: மனு கொடுக்க திரண்ட ஆல்பர்ட்டா மக்கள்








கனடாவிடமிருந்து விடுதலை வேண்டும் என கோரி புகார் மனு அளிக்க ஆல்பர்ட்டா மாகாண மக்கள் நீண்ட வரிசையில் நிற்கும் காட்சிகள் வெளியாகி வியப்பை ஏற்படுத்தியுள்ளன.

கனேடிய மாகாணங்களில் ஒன்றான ஆல்பர்ட்டா மாகாணம், இயற்கை வளங்கள் நிறைந்த ஒரு மாகாணமாகும்.

ஆனால், கனடாவுக்கு தாங்கள் தங்கள் வளம் மூலம் பெரிய அளவில் பங்களிப்பைச் செய்தும், பதிலுக்கு ஃபெடரல் அரசு தங்களை சரியாக கவனிப்பதில்லை, தங்கள் கருத்துக்கள் நாடாளுமன்றத்தில் எடுபடவில்லை என்னும் கருத்து ஆல்பர்ட்டா மக்களிடையே நிலவி வருகிறது.

ஆகவே, வளம் நிறைந்த ஆல்பர்ட்டா, கனடாவிலிருந்து பிரிந்து தன்னைத்தான் நிர்வகிக்கவேண்டும் என ஆல்பர்ட்டா மக்கள் கருதுகிறார்கள். 02▶




## சவர்க்காரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற ரசாயனப் பொருள் அதிக அளவில் உள்ளதாகக் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாறு இந்த சவர்க்கார வகை மீளப் பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மீட்பு அறிவிப்பின்படி, லேக் ஒப் த வுட்ஸ் சன்ரைஸ் சோப் நிறுவனம் தயாரித்த Shades of Grey என்ற பெயருடைய சவர்க்காரங்கள் சுமார் 400 அலகுகள், 2019 ஜனவரி முதல் 2026 ஜனவரி வரை கனடாவில் விற்பனை செய்யப்பட்டுள்ளன என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த சவர்க்காரங்கள் ஒன்டாரியோ மாகாணத்தின் கெனோரா நகரில் தயாரிக்கப்பட்டவை எனவும், 16 கிராம், 67 கிராம் மற்றும் 135 கிராம் எடையுள்ள கட்டிகளாக விற்பனை செய்யப்பட்டுகின்றன என கூறப்பட்டுள்ளது.

மீட்பு அறிவிப்பில், “மெதில் யூஜெனோல் புற்றுநோய் ஏற்படுத்தும் அபாயம் உள்ளதாகக் கருதப்படுவதால், தூய ரசாயனப் பொருளாக பயன்படுத்த தடை செய்யப்பட்டுள்ளதே தவிர, சில தாவரச் சாற்றுகளில் இயற்கையாக இருக்கும் அளவுக்கு மட்டும், குறிப்பிட்ட வரம்புகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது” என ஹெல்த் கனடா விளக்கமளித்துள்ளது.

இந்நிலையில், 2026 ஜனவரி 7 வரை இந்த தயாரிப்புகளால் எந்தவிதமான விபத்து அல்லது காயம் சம்பவங்களும் பதிவாகவில்லை எனவும் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்டுள்ள சவர்க்காரங்களை உடனடியாகப் பயன்படுத்துவதை நிறுத்தி, அவற்றை முறையாக அகற்றிவிட்டு, மாற்றுப் பொருளுக்காக நிறுவனத்தை தொடர்பு கொள்ளுமாறு நுகர்வோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



## சீனா - கனடா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேசமயம், கனடா, சீனாவின் மின்சார வாகனங்களுக்கு 6.1 சதவீதம் most - favoured - nation வரி விதத்தைப் பயன்படுத்தும் என அறிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தம், கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்ட பரஸ்பர வரி விதிப்புகள் மற்றும் உறவு சிக்கல்களுக்குப் பின் வந்த முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

சீனாவுடன் நடந்த பேச்சுவார்த்தைகள் நேர்மையானதுமாக, மரியாதையானதுமாக இருந்ததாக கார்னி குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள், தேர்தல் தலையீடு போன்ற கனடாவின் சிவப்பு கோடுகள் குறித்து சீனாவிடம் தெளிவாக தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவுடன் உறவை மீண்டும் அமைப்பது, அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகம் விதித்த வரிகள் காரணமாக ஏற்பட்ட சிக்கல்களுக்கு பதிலளிக்கும் முயற்சியாகவும் பார்க்கப்படுகிறது.

உலகம் மிகப் பெரிய மாற்றங்களை சந்தித்துள்ளது. கனடாவின் நிலைப்பாடு, எதிர்காலத்தை தீர்மானிக்கும் எனவும் கார்னி கூறியுள்ளார்.

சீனா, தன்னை நிலையான உலக கூட்டாளி என காட்ட முயற்சிக்கிறது. சமீபத்தில் தென் கொரியா, அயர்லாந்து தலைவர்கள் பீஜிங்கைச் சந்தித்துள்ளனர். விரைவில் பிரித்தானிய மற்றும் ஜேர்மன் தலைவர்களும் சீனாவுக்கு செல்லவுள்ளனர்.

சீனா - கனடா வரி சலுகை ஒப்பந்தம், இரு நாடுகளின் உறவை மீண்டும் உயிர்ப்பிக்கும் முக்கிய முன்னேற்றமாகவும், உலக வர்த்தகத்தில் புதிய சமநிலையை உருவாக்கும் முயற்சியாகவும் பார்க்கப்படுகிறது.

## கனடாவிடமிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், Alberta Prosperity Project என்னும் அமைப்பின் தலைவரான மிச் சில்வெஸ்டர் என்பவர், முறைப்படி அரசின் தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெற்று புகார் மனு ஒன்றை உருவாக்கியுள்ளார்.

ஆல்பர்ட்டா கனடாவிலிருந்து பிரியவேண்டும் எனக் கூறும் அந்த புகார் மனுவில் மக்கள் கையெழுத்திடுவது தொடர்பாக விவாதிக்கும் கூட்டங்களில் பங்கேற்க மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்கிறார்கள்.

இதற்கிடையில், நான்கு மாதங்களில் அந்த புகார் மனு சுமார் 178,000 கையெழுத்துக்களைப் பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.



# கனடாவில் இடம்பெற்ற விபத்தில் சிறுமி மரணம்

கனடாவின் எட்மன்டன் நகரத்தின் வடக்கே உள்ள நெடுஞ்சாலையில் செவ்வாய்க்கிழமை இரவு நடந்த விபத்தில் 5 வயது சிறுமி உயிரிழந்துள்ளார்.

மேலும் மூவர் காயமடைந்த சம்பவம் தொடர்பாக ஒருவர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கனடிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பீவர் ரிவர் பாலம் அருகே ஹைவே 897-ல், ஃபோர்டு F-350 சிறிய ரக வாகனமும் ஒரு வானும் மோதிக் கொண்டன என தெரிவிக்கப்படுகின்றது.

அந்த வானின் 5 வயது சிறுமி, 10 மாத குழந்தை, 27 வயதான தாய் மற்றும் 30 வயதான ஆண் ஒருவர் பயணம் செய்திருந்தனர்.

இந்த விபத்தில் மூவரும் பல்வேறு காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், 5 வயது சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என கனடிய பொலிஸார் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் மேற்கொண்ட விசாரணையில், விபத்தில் ஈடுபட்ட ஃபோர்டு F-350 வாகனம், மூன்று நாள்களுக்கு முன்பு சாஸ்காட்சுவானின் லாஷ்பர்ன் பகுதியில் திருடப்பட்டதாகவும், விபத்துக்குப் பிறகு அதன் சாரதி சம்பவ இடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார் எனவும் தெரியவந்தது.

காயமடைந்த குடும்பத்துக்கு உதவுவதற்காக நின்றிருந்த ஒருவரின் காரையும் அந்த நபர் திருடிச் சென்றுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.அந்த திருடப்பட்ட வாகனம் ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.இதையடுத்து, குற்றங்களில் ஈடு படும் நபர்கள் வசிக் கும் இடங்களில் பொலிஸார் தேடு தல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

# கனடாவில் சீனாவின் செல்வாக்கை எதிர்கொள்ள தயாராகின்றார் ட்ரம்ப்

கனடாவில் சீனாவின் செல்வாக்கை எதிர்கொள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தயாராகி வருகின்றார் என அவரது முன்னாள் தேர்தல் பரப்புரை வடிவமைப்பாளர் ஸ்டீவ் பேனன் தெரிவித்துள்ளார்.

அடுத்த முதன்மையான விடயம் கனடாவாகத்தான் இருக்கப் போகிறது. கனடா தான் அடுத்த உக்ரைன், ஏனென்றால் அவர்களால் தங்கள் வடக்கு ஆர்க்டிக் எல்லையைப் பாதுகாக்க முடியாது, மேலும் சீனா வந்து ஒரு பகுதியை ஆக்கிரமிக்கப் போகிறது என்கிறார் ஸ்டீவ் பேனன்.

அவர்களால் அதைப் பாதுகாக்க முடியாது, மேலும் ட்ரம்ப் கனடா மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்றார். ட்ரம்பின் முதல் பதவிக்காலத்தில், அவர் ஒரு ஆர்க்டிக் செயற்குழுவை அமைத்தார், அது கிரீன்லாந்தின் புவிசார்- மூலோபாய முக்கியத்துவம் குறித்த அவரது புரிதலை ஆழப்படுத்தியது.

மேலும் கனடாவின் ஆர்க்டிக் பிராந்தியத்தின் பாதிப்புகள் குறித்த



கவலைகளை அவருக்கு எடுத்துரைக்கப்பட்டது. 2018-ல் சீனா தன்னை ஒரு ஆர்க்டிக் பகுதிக்கு அருகிலுள்ள நாடு என்று குறிப்பிட்டதிலிருந்து, அந்தப் பிராந்தியத்தில் சீனாவின் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி ட்ரம்ப் நீண்ட காலமாகவே கவனத்தில் கொண்டுள்ளார்.

கனடாவும் சீனாவுடன் தற்போது நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தி வருகிறது, இது அமெரிக்காவுடனான தற்போதைய உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்தில் முதல் முறையாக சீனாவுக்கு விஜயம் செய்த கனேடிய பிரதமர் மார்க் கார்னி, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கையும் சீனாவையும் மூலோபாய பங்காளிகள் என்று குறிப்பிட்டமை அமெரிக்காவில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

மட்டுமின்றி, கிரீன்லாந்த் விவகாரத்தில் ஜனாதிபதி ட்ரம்பிற்கு எதிராக, கார்னி டென்மார்க் மற்றும் நேட்டோ நட்பு நாடுகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறார்.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அந்தப் பகுதியிலிருந்து ரஷ்யாவையும் சீனாவையும் விலக்கி வைப்பதே, கிரீன்லாந்தை வாங்குவதற்கான காரணம் என ட்ரம்ப் மீண்டும் குறிப்பிட்டுள்ளார்.

சீனா, பிரேசில் மற்றும் சிலியில் உள்ள எரிசக்தி நிறுவனங்கள் உட்பட லத்தீன் அமெரிக்காவில் பெருமளவில் முதலீடு செய்துள்ளது. இதன் காரணமாக வெனிசுலாவில் இருந்து சீனாவிற்கான எண்ணெய் ஏற்றுமதியை ட்ரம்ப் தொடர்ந்து கட்டுப்படுத்தி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.